# தமிழ் நாடு தகவல் ஆணையம்

காமதேனு கூட்டுறவு சிறப்பங்காடி முதல் தளம்,, புது எண் 378, அண்ணா சாலை,
தேனாம்பேட்டை சென்னை-600018. (தபால் பெட்டி எண் 6405 தேனாம்பேட்டை)
*தொலைபேசி எண் 24357580.*

**வழக்கு எண். 24232 / விசாரணை / 2009**

**<u>விசாரணை நடைபெற்ற நாள் 27.01.2010.</u>**

| | |
|---|---|
| முன்னிலை : | திரு. தி.சீனிவாசன். எம்.எஸ்சி.,<br>மாநில தகவல் ஆணையர் |
| மனுதாரர் : | திரு. என். ரவீந்திராரெட்டி,<br>த/பெ. நரசிம்மாரெட்டி,<br>நல்லூர் அஞ்சல்,<br>நல்லூர் அக்ரஹாரம்,<br>பேகேப்பள்ளி பஞ்சாயத்து,<br>ஒசூர் – 635 103, |
| பொது அதிகார அமைப்பு : | பொதுத் தகவல் அலுவலர்,<br>உதவி இயக்குநர் ( ஊராட்சிகள்) அலுவலகம்,<br>மாவட்ட ஆட்சியர் வளாகம்,<br>கிருஷ்ணகிரி மாவட்டம். |

---

மனுதாரர் திரு. என். ரவீந்திராரெட்டி விசாரணைக்கு வரவில்லை. திரு. U. இராமகிருஷ்ணன், பொதுத் தகவல் அலுவலர் / உதவி இயக்குநர் (ஊராட்சிகள்), கிருஷ்ணகிரி இவ்வாணையத்தில் இன்று (27.01.2010) நடைபெற்ற விசாரணைக்கு வந்திருந்தார்.

மனுதாரர் 22.06.09 அன்று 12 இனங்களில் தகவல் கேட்டு விண்ணப்பித்துள்ளார். மனுதாரருக்கு 07.07.09 அன்று தகவல்கள் தரப்பட்டுள்ளன. 27.07.09 அன்று மனுதாரர் உரிய தொகை செலுத்தியுள்ளார். 04.08.09 அன்று மனுதாரருக்கு தகவல்கள் தரப்பட்டுள்ளன. 17.08.09 அன்று மேல்முறையீடு செய்துள்ளார். இவ்வாணையத்திற்கு 24.09.09 அன்று மேல்முறையீடு செய்த மனு இன்று (27.01.2010) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

விசாரணைக்கு மனுதாரர் வராததால் பொதுத் தகவல் அலுவலரிடம் விசாரிக்கப்பட்டது. பொதுத் தகவல் அலுவலர் மனுதாரருக்கு அவ்வப்போது தகவல்கள் தரப்பட்டதாகவும், மனுதாரர் பல மனுக்கள் தகவல் பெறும் உரிமைச் சட்டப்படி செய்துள்ளதாகவும் தெரிவித்தார். குறிப்பாக மனுதாரர் 17.08.09 அன்று மேல்முறையீட்டில் தெரிவித்துள்ளது குறித்து விசாரிக்கப்பட்டது. மனுதாரருக்கு 27.10.09 அன்று தகவல்கள் தரப்பட்டதாக பொதுத் தகவல் அலுவலர் தெரிவித்தார். உரிய ஆவணங்களை பார்வையிட்டு மனுதாரருக்கு தகவல்கள் தரப்பட்டுள்ள விவரம் அறியப்பட்டது. மனுதாரர் இவ்வாணையத்திற்கு அனுப்பிய மேல்முறையீட்டு மனுவில் குறிப்பிட்டுள்ள இனங்களுக்கும் மனுதாரரின் 17.08.09 தேதிய மனுவிற்கு 27.10.09 அன்று அளிக்கப்பட்ட தகவலாக உள்ளதால் மனுதாரர் கேட்ட தகவல்கள் வழங்கப்பட்டதாக முடிவு செய்யப்பட்டு இவ்வழக்கு இத்துடன் முடிவு செய்யப்படுகிறது.

**ஒப்புதல் பெறப்பட்ட நாள் 01.02.2010**
**ஆணையத்தின் ஆணைப்படி**

**தமிழ்நாடு தகவல் ஆணையம்**

**( சு. மோகன தாஸ் )**
**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். 24232/09</u>**

**பெறுநர்**
**பொதுத் தகவல் அலுவலர்,**
**உதவி இயக்குநர் ( ஊராட்சிகள்) அலுவலகம்,**
**மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம்,**
**கிருஷ்ணகிரி மாவட்டம்.**

**திரு. என். ரவீந்திராரெட்டி,**
**த/பெ. நரசிம்மாரெட்டி,**
**நல்லூர் அஞ்சல்,**
**நல்லூர் அக்ரஹாரம்,**
**பேகேப்பள்ளி பஞ்சாயத்து,**
**ஒசூர் – 635 103,**